**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 53 ஆம் பிரிவின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு விளைவாக சொத்து தொகுதியொன்றின் இழிவுப் பெறுமதி குறைவடையும் போது அந்த குறைவு மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காண வேண்டியிருந்த போதிலும், ரூபா62,133,045 ஆன மீள்மதிப்பீட்டு நட்டம் மீள்மதிப்பீட்டு இலாபத்தில் குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றக்குறை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரியதாக நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 63,825,567 ஆன மூலதன மானியம் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது பணிக்கொடை செலுத்தும் போது பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் சீராக்கப்படாமல் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 563,582 இனால் பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் ஆண்டின் பற்றாக்குறை முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக் கொடைகளை செலுத்தும் போது ஒதுக்கப்பட்ட பணிக் கொடைக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்ககம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணத்தின் பெறுமதி ரூபா7,569,134 ஆக இருந்த போதிலும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா14,598,570 ஆனமையால் ரூபா7,029,436 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரிசெய்யப்பட்ட பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படும். | பட்டோலைகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளின் போது அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா6,155,458 தொகை மீளாய்வாண்டின் போது கணக்குகளில் இருந்து அகற்றப்பட்ட போதிலும், அந்த அட்டுறு செலவினத்தை தீர்த்து வைப்பதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020.12.31 இல் உள்ளவாறு அட்டுறு செலவின விபரங்களை சமர்ப்பிக்கும் போது தவறுடன் சமர்ப்பிக்கப்பட்டமை தற்போது முழுமையாக சரிசெய்யப்பட்டுள்ளது. | உரிய தகவல்கள் மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா22,149,528 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் 05 வருடங்களை விஞ்சியிருந்த 06 விடயங்களுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா11,907,417 ஆன கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது. | மீதிகளை தீர்த்து வைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழுவின் பரிந்துரையை உள்ளடக்கிய இறுதி அறிக்கை அடுத்துவரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கு சமர்ப்பித்து இந்த மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா28,118,983 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதியில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கூட்டுமொத்தம் ரூபா6,147,363 மற்றும் 1 வருடத்திற்கும் 3 வருடங்களுக்கும் இடையிலான கூட்டுமொத்தம் ரூபா21,971,620 ஆன மீதி காணப்பட்ட போதும் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் திறைசேரி நிதிஏற்பாடு கிடைத்த பின்னர் தீர்த்து வைக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 151(1) | தங்காலை பீடத்தில் பெறுமதி கணிப்பீடு செய்ய முடியாத 200 பொருள் வகைகள் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் 02 கொள்கலன் பெட்டிகளிலும், 01 கடை அறையிலும் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 502(2) | பல்கலைக்கழகத்தால் ரூபா3,540,626 தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு செலுத்தி சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் மற்றும் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையான சொத்துப் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| iii. | நிதிப் பிரமாணம் 570 | 02 வருடங்களை விஞ்சியிருந்த வைப்புக்கள் ரூபா 7,119,436 ஆன ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்காமல் நிறுவனத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிர்மாண நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்படுகின்ற பொறியியலாளர் வேலைத் தளத்தின் மூலம் கிடைக்கின்ற மீளசெலுத்த வேண்டிய வைப்பு தொடர்பாக உறுதிப்படுத்தியதன் பின்னர் ரூபா 7,119,436 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது | 02 வருடங்களை விஞ்சிய நிறுத்தி வைத்தல் பணம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| iv. | நிதிப் பிரமாணம் 756 | 2020 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i. | XIX அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | தங்காலை நிலையத்தில் உதவி பணிப்பாளரால் 2012 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தின் நிரற்படுத்தப்பட்ட வீடொன்றில் குடியிருந்தமைக்காக அவரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 688,113 கூட்டுதொகையான வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | XIX அத்தியாயத்தின் 5.2.2 ஆம் பந்தி | பல்கலைக்கழகத்திற்குரிய தங்காலை கல்லூரியில் கட்டிடங்களின் அறைகளை வெளிவாரி விரிவுரையாளருக்கு விடுதி வசதி வழங்கும் போது தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நாளொன்றுக்கு ரூபா 250 வீதம் வாடகை அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே நீர் மற்றும் மின்சார கட்டணத்தை அறவிடுவதற்கும் | பதிலளிக்கப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2014 இன் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டம் | | | |
| i. | 23(அ) பிரிவு | ஏதாவது குறிப்பிட்ட வகையான விண்ணப்தாரரை அனுமதிப்பதற்கான ஏதாவது செயற்திறன் பரிசோதனையொன்று பரீட்சைகள் திணைக்களத்தால் பல்கலைக்கழத்திடம் விசாரித்து நடாத்தப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்ட போதும் இதுவரை காணப்பட்ட செயற்திறன் பரிசோதனை தொடர்பாக பல்கலைக்கழகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாணவர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் பல்கலைக்கழகத்தின் பரீட்சை பிரிவின் மூலம் செயற்திறன் பரிசோதனை நடாத்தப்படுகின்றது. | இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 66 ஆம் பிரிவு | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்காக உரித்தாக்கிக் கொள்ள முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதும், அதற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையை உரித்தாக்கிக் கொண்டு கற்கை படிகள் மற்றும் ஆராய்ச்சி படிகளை உள்ளடக்கிய ஏனைய கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் இன்றி ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பிரிவுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேசிய பல்கலைக்கழகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் சம்பள படி நிலைகள் சமுத்திர பல்கலைக்கழத்திற்காகவும் | ஆராய்ச்சி படிகள் மற்றும் கற்கை படிகள் தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்குரிய ஊழியர் எண்ணிக்கை அங்கீகரிக்கும் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் படியே செலுத்தப்பட்டிந்தது. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பிரிவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் சம்பள படிநிலைகளில் சம்பளம் மற்றும் | இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரித்தாக்கிக் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2022 பெப்ரவரி 22 ஆம் திகதிய இலக்கம் 02/2019 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகள் | சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்களின் உடன்படிக்கை மீறல்களாக காண்பித்து அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 1,732,125 ஆன தொகை திறைசேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், அது பிணைமுறி மீறல் ஒதுக்கமாக உரிமைகள் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இந்த பணம் திறைசேரிக்கு அனுப்புதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா44,713,970 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,719,057 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா36,994,913 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பயிற்சி செலவினம், ஏனைய செலவினம், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் வழங்கல் சேவைகள் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 14 மற்றும் 20 என்ற இரண்டு தினங்களில் செயல்திறன் பரிசோதனை பரீட்சை மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக மேற்பார்வையாளர் மற்றும் பரீட்சை மண்டப உதவியாளர் பதவிகள் என 187 பேர்களுக்கு முறையான அங்கீகாரம் இன்றி கூட்டுமொத்தமாக ரூபா489,500 செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது செயல்திறன் பரிசோதனைகளுக்குரிய பரீட்சைக் கடமைகளுக்காக வழங்கப்படுகின்ற படிகள் தொடர்பாக பொது திட்டமொன்றை தயாரித்து அங்கீகாரத்தை பெற்று அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற மூலதன நிதியம் வருடாந்தம் சரியான பிரகாரம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா9,096,181 மீதி சேமிக்கப்பட்டிருந்தது. | ரூபா9,096,181 மீளாய்வாண்டின் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட அட்டுறு செலவினம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன செலவினம் தீர்க்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஏனைய கொடுப்பனவுகளுடன் மீதிகள் முழுமையாக தீர்த்து வைக்கப்படும். | மீளாய்வாண்டின் மூலதன செலவின விடயத்திற்குரிய அட்டுறுவாக காணப்பட்ட ரூபா6,942,331 செலவினம் அகற்றப்பட்ட பின்னரும் இந்த வங்கி கணக்கில் ரூபா2,153,850 மீதி சேமிக்கப்பட்டிருந்ததுடன், மூலதன நிதியம் உரிய முகாமைத்துவத்துடன், ஈடுபடுத்தி சேமிப்பு பணத்தை திறைசேரிக்கு அறிக்கையிடல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு முரணாக 11 பதவிகளுக்காக 25 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது மாத்திரம் சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா31,816,612 செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதான அலுவலகம் மற்றும் கல்லூரிகளின் 42 ஆலோசனையாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் தரமாகவும் வினைத்திறனாகவும் நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்லும் போக்கும் அதிகரித்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்தின் செயலாற்றலை நாளதுவரையாக பேணிச் செல்வதற்காக வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்தை ஒப்பீடுசெய்யும்போது 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சி 40 சதவீதம் முதல் 605 சதவீத்திற்கு இடையிலான செலவினம் செய்யப்பட்டிருந்தது. | இந்த நிலைமை பொருளாதார நெருக்கடியான காலத்தில் பணவீக்கம் உயர் மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக பாதீடு செய்யப்பட்ட பெறுமதியை விட செலவினங்களை செய்ய வேண்டியிருந்தது. | செலவின கட்டுப்பாட்டு கருவியாக பாதீட்டை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |